## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-3 - வெள்ளைச் சுரிசங்கு
### (திருநாமம் கேட்டு மயக்கம் தெளிந்த பின், தாய்மாரும் தோழிமாரும் தடுக்கவும், நாயகி திருப்பேரைக்குச் செல்வேன் என்று துணிந்ததைக் கூறும் பாசுரம்)

3359 * வெள்ளைச் சுரிசங்கொடு ஆழி ஏந்தித் *
தாமரைக் கண்ணன் என் நெஞ்சினூடே *
புள்ளைக் கடாகின்றவாற்றைக் காணீர் *
என் சொல்லிச் சொல்லுகேன்? அன்னைமீர்காள்! **
வெள்ளச் சுகமவன் வீற்றிருந்த *
வேத ஒலியும் விழா ஒலியும் *
பிள்ளைக்குழா விளையாட்டு ஒலியும் அறாத் *
திருப்பேரையில்[1] சேர்வன் நானே 1

3360 நானக் கருங்குழல் தோழிமீர்காள்! *
அன்னையர்காள்! அயற்சேரியீர்காள்! *
நான் இத்தனி நெஞ்சம் காக்க மாட்டேன் *
என் வசம் அன்றிது இராப்பகல் போய் **
தேன் மொய்த்த பூம்பொழில் தண்பணை சூழ் *
தெந்திருப்பேரையில் வீற்றிருந்த *
வானப்பிரான் மணிவண்ணன் கண்ணன் *
செங்கனிவாயின் திறத்ததுவே 2

3361 செங்கனிவாயின் திறத்ததாயும் *
செஞ்சுடர் நீள்முடித் தாழ்ந்ததாயும் *
சங்கொடு சக்கரம் கண்டுகந்தும் *
தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும் **
திங்களும் நாளும் விழா அறாத *
தென்திருப்பேரையில் வீற்றிருந்த *
நங்கள் பிரானுக்கு என் நெஞ்சம் தோழீ! *
நாணும் நிரையும் இழந்ததுவே 3

3362 இழந்த எம்மாமை திறத்துப் போன *
என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார் *
உழந்து இனி யாரைக் கொண்டு என் உசாகோ? *
ஓதக் கடல் ஒலி போல ** எங்கும்
எழுந்த நல்வேதத்தொலி நின்றோங்கு *
தென்திருப்பேரையில் வீற்றிருந்த *
முழங்கு சங்கக்கையன் மாயத்து ஆழ்ந்தேன் *
அன்னையர்காள்! என்னை என் முனிந்தே? 4

[1] திருப்பேரெயில் என்று ஒவ்வொரு பாசுரத்திலும் பாடமுண்டு

3363 முனிந்து சகடம் உதைத்து * மாயப்
பேய் முலை உண்டு மருதிடை போய் *
கனிந்த விளவுக்குக் கன்று எறிந்த *
கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன் **
முனிந்து இனி என் செய்தீர்? அன்னைமீர்காள்! *
முன்னி அவன் வந்து வீற்றிருந்த *
கனிந்த பொழில் திருப்பேரையிற்கே *
காலம் பெற என்னைக் காட்டுமினே 5

3364 காலம் பெற என்னைக் காட்டுமின்கள் *
காதல் கடலின் மிகப் பெரிதால் *
நீலமுகில் வண்ணத்து எம்பெருமான் *
நிற்கும் முன்னே வந்து என் கைக்கும் எய்தான் **
ஞாலத்து அவன் வந்து வீற்றிருந்த *
நான்மறையாளரும் வேள்வியோவா *
கோலச் செந்நெற்கள் கவரி வீசும் *
கூடு புனல் திருப்பேரையிற்கே 6

3365 பேரெயில் சூழ் கடல் தென்னிலங்கை *
செற்ற பிரான் வந்து வீற்றிருந்த *
பேரையிற்கே புக்கு என் நெஞ்சம் நாடிப் *
பேர்த்து வர எங்கும் காண மாட்டேன் **
ஆரை இனி இங்குடையம்? தோழீ! *
என் நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை *
ஆரை இனிக் கொண்டு என் சாதிக்கின்றது? *
என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே 7

3366 கண்டதுவே கொண்டு எல்லாரும் கூடிக் *
கார்க்கடல் வண்ணனோடு என் திறத்துக்
கொண்டு * அலர் தூற்றிற்று முதலாக் *
கொண்ட என் காதல் உரைக்கில் தோழீ! **
மண்திணி ஞாலமும் ஏழ் கடலும் *
நீள்விசும்பும் கழியப் பெரிதால் *
தெண்திரை சூழ்ந்து அவன் வீற்றிருந்த *
தென்திருப்பேரையில் சேர்வன் சென்றே 8

3367 சேர்வன் சென்று என்னுடைத் தோழிமீர்காள்! *
அன்னையர்காள்! என்னைத் தேற்ற வேண்டா *
நீர்கள் உரைக்கின்றது என் இதற்கு? *
நெஞ்சும் நிறைவும் எனக்கு இங்கில்லை **
கார்வண்ணன் கார்க்கடல் ஞாலம் உண்ட *
கண்ணபிரான் வந்து வீற்றிருந்த *
ஏர்வள ஒண்கழனிப் பழனத் *

தென்திருப்பேரையின் மாநகரே 9

3368 நகரமும் நாடும் பிறவும் தேர்வேன் *
நாண் எனக்கில்லை என் தோழிமீர்காள்! *
சிகரமணி நெடுமாட நீடு *
தென்திருப்பேரையில் வீற்றிருந்த **
மகர நெடுங்குழைக் காதன் மாயன் *
நூற்றுவரை அன்று மங்க நூற்ற *
நிகரில் முகில்வண்ணன் நேமியான் * என்
நெஞ்சம் கவர்ந்து எனையூழியானே? 10

3369 * ஊழிதோறூழி உருவும் பேரும் *
செய்கையும் வேறவன் வையம் காக்கும் *
ஆழிநீர் வண்ணனை அச்சுதனை *
அணிகுருகூர்ச் சடகோபன் சொன்ன **
கேழில் அந்தாதி ஓராயிரத்துள் *
இவை திருப்பேரையில் மேய பத்தும் *
ஆழியங்கையனை ஏத்த வல்லார் *
அவர் அடிமைத் திறத்து ஆழியாரே 11

**அடிவரவு:** வெள்ளை நான செங்கனி இழந்த முனிந்து காலம்
பேரெயில் கண்டது சேர்வன் நகரம் ஊழி ஆழி